**மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**

**கும்முடிப்பூண்டி**

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C 66/2023 | காவல் நிலையம்: பாதிரிவேடு | |
| பெயர் : சதாசிவம் | அ.சா.9 | நாள் : 23.02.2026 |

**அரசு தரப்பு சாட்சியான அ.சா.9 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் OATH Act 4 வது பிரிவின் படி திரு.சுனில் குமார், கிரேடு 3 பென்ச் கிளர்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சதாசிவம் | தாலுக்கா | : | -- |
| தந்தை பெயர் | : | முத்து | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | -- | வயது | : | 33 |

**(எதிரி ஆஜர் இல்லை. எதியின் வழக்கறிஞர் ஆஜர். எதிரிக்காக 355 B.N.S.S. ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது செங்கல்பட்டு மாவட்டம் அணைக்கட்டு காவல் நிலையத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.07.2018 அன்று மாலை 20.00 மணிக்கு பாதிரிவேடு காவல் நிலையத்தில் நான் பணியில் இருந்தபோது திருமலை என்பவர் காவல் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பாதிரிவேடு காவல் நிலைய சமுதாய பதிவேடு எண். 205/2018 வழங்கினேன். புகார் அளிக்கும் போது மனுதாரரின் சித்தப்பா சுகந்தன் என்பவரும் ஆஜரில் இருந்தார். மேற்படி மனுவின் மீது முதற்கட்ட விசாரணை முடித்து 20.07.2018 ம் ஆண்டு பகல் 11.30 மணிக்கு பாதிரிவேடு காவல் நிலைய குற்ற எண்.308/2018 சட்ட பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(மேற்படி புகார் அதசாஆ-6 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அதசாஆ-7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் அன்றைய தினமே சம்பவ இடமான பொம்மாச்சி குளம் பூதுார் செல்லும் சாலையில் சிவா என்பவரின் நிலமான சம்பவ இடத்திற்கு பகல் 12.30 மணிக்கு சாட்சிகள் சந்திரன் மற்றும் இரவி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.8 மற்றும் அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பார்வை மகஜர் 12.30 மணிக்கு தயார் செய்யப்பட்டபோதும் அதில் 11.00 மணி என தவறாக பதிவாகியுள்ளது. பின்னர் தயார் செய்யப்பட்ட பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடமிருந்து சாட்சி கையொப்பம் பெற்றேன். மேலும் சம்பவத்தில் காயம்பட்டு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த நபர்களான திருமலை, சுகந்தன் ஆகியோர்களை மருத்துவமனையில் விசாரணை செய்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இதர சாட்சிகளான சகுந்தலா, இராஜேஸ்வரி, சந்திரபாபு, பாபு ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் மருத்துவர் திருமுருகானந்தம் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விசாரணையின்போது அவர் திருமலைக்கு ஏற்பட்ட காயமானது கொடுங்காயம் எனவும், சுகந்தன் என்பவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் எனவும் சான்று வழங்கினார். அவை ஏற்கனவே அரசு தரப்பு ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் எதிரியானவர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்ய இயலவில்லை. எதிரியானவர் மேற்படி நீதிமன்ற உத்தரவின் நிபந்தனையின்படி காவல் நிலையத்தில் கையெழுத்திட்டு வந்தவரிடம் மனுதாரரையும் அவரது சித்தப்பா சுகந்தன் என்பவரையும் தாக்க பயன்படுத்திய கட்டையை பற்றி விசாரித்தபோது அதனை போலிஸ் விசாரணைக்கு பயந்து எரித்து விட்டதாக தெரிவித்தார். அதன் காரணமாக சம்பவத்திற்கு பயன்படுத்திய கட்டையை பறிமுதல் செய்ய இயலவில்லை. மேலும் விசாரணையின் அடிப்படையில் வழக்கின் சட்ட பிரிவுகளை 294(b), 324, 506(ii) இதசவிலிருந்து 294(b), 324, 506(ii), 326 இதச என மாற்றம் செய்தேன். **(அந்த சட்ட பிரிவு மாற்றல் அறிக்கை அ.த.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் இவ்வழக்கின் புலனாய்வு முடித்து 10.10.2018 ம் தேதி நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இவ்வழக்கில் நான்தான் புகாரை பெற்று சிஎஸ்ஆர் வழங்கினேன் என்றால் சரிதான். எனவே இந்த வழக்கு முதற்கட்ட விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவேண்டிய வழக்கு என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை

நான் 20.07.2018 அன்று பதிவு செய்தேன். சிஎஸ்ஆர் வழங்கப்பட்ட 15.07.2018 லிருந்து 20.07.2018 தேதிக்குள் நான் யார் யாரை விசாரணை செய்தேன் என்றால் நான் சம்பவ இடம் சென்று அங்கு இருந்த நபர்களிடம் விசாரித்தேன், ஆனால் குறிப்பிட்டு யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. நான் சாட்சிகள் அனைவரையும் 20.07.2018 அன்று விசாரணை செய்தேன் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் அங்கையா என்ற மருத்துவரிடம் சிகிச்சை பெற்று வருவதாக புகாரில் குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் மனுதாரர் எனது விசாரணையில் அது பற்றி கூறவில்லை. அங்கையா என்பவரை நான் விசாரித்து சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் அவரை பற்றி புகார்தாரர் கூறாததால் நான் அவரை விசாரிக்கவில்லை. புாகாரில் புகார்தாரர் அங்கையா பற்றி குறிப்பிட்டு கூறியுள்ளபோதிலும் நான் அவரை முறையாக விசாரிக்கவில்லை என்றால் அங்கையா என்பவர் யார் என்று தெரியாது அதனால் விசாரிக்கவில்லை. இதச 294(b)கான முகாந்திரம் புகாரில் இல்லை என்றால் சரியல்ல. எந்த பொது இடத்தில் எந்த வார்த்தையில் எதிரி திட்டினார் என்று புகாரிலோ அல்லது விசாரணையின்போதோ குறிப்பிடவில்லை என்றால் திட்டியதை பற்றி புகார்தாரர் சொன்னார், ஆனால் என்ன வார்த்தை என்று குறிப்பிடவில்லை. இதச 294(b)கான முகாந்திரம் இவ்வழக்கில் இல்லை என்பதால் இப்பிரிவு இவ்வழக்கிற்கு பொருத்தாது என்றால் சரியல்ல. அபாயகரமான ஆயுதத்தால் தன்னிச்சையாக தாக்கும்போதுதான் இதச 324 பொருந்தும் என்றால் இல்லை கட்டையால் தாக்கினாலும் பொருந்தும். கட்டை அபாயகரமான ஆயுதம் இல்லை என்றால் சரியல்ல. குத்துதல் அல்லது கிழித்தல், விஷம், தீ மற்றும் சுடுதல் போன்ற சூழ்நிலைகளில்தான் அபாயகரமான ஆயுதம் என்பது பொருந்தும் என்றாலும் இவ்வழக்கானது கட்டையால் தாக்கபட்டதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் இதச 324 பொருந்தாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் அபாயகரமான ஆயுதம் பயன்படுத்தபடாததால் இதச 326 பொருந்தாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் கட்டையை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். வழக்கின் எந்த ஒரு கட்டத்திலும் குற்றமுறு மிரட்டல் விடுத்ததாக சொல்லபடாததால் இதச 506(2)ம் இவ்வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல. சம்பவமானது இரவில் நடைபெற்றது என்றால் சரிதான். சம்பவ நேரத்தின்போது மின்சாரம் இருந்தது என்பதற்காக மின்வாரிய ஊழியர்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கபடவில்லை என்றால் அவசியம் ஏற்படாததால் விசாரிக்கவில்லை.

நான் சம்பவ இடம் செல்லாமலும் சாட்சிகளை முறையாக விசாரணை செய்யாமலும் காவல் நிலையத்திலேயே ஆவணங்களை தயார் செய்து ஒரு தவறான குற்றபத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை)**

ஓம்/- சதாசிவம்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2026.02.23 11:46:38 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,

கும்முடிப்பூண்டி